**தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களிலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள் விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து, நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள் விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த வருடத்தில் பெறவேண்டிய வட்டி வருமானக் கணக்குகளில் ஏற்பட்ட தவறினை மீளாய்ண்டில் திருத்தும் போது தவறுதலாக சீராக்கம் செய்யப்பட்ட காரணத்தால் முதலீட்டு கணக்கு மற்றும் ஆரம்ப ஒதுக்கங்கள் கணக்கு ஆகிய இரு கணக்குகளும் ரூபா 10,355,671 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் குறிப்பிடப்பட்டவாறு 2022 ஆம் ஆண்டின் வட்டி வருமானத்தினை திருத்துதல் 2023 ஆம் ஆண்டின் போது கணக்கீட்டு தரவு கட்டமைப்பிற்கு கணக்கு வைக்கும் போது முன்னைய ஆண்டு சீராக்கங்களின் வரவு வைப்பதற்கு பதிலாக முதலீட்டு கணக்கு வரவு வைக்கப்பட்டுள்ளமையால் கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு வழு இடம்பெற்றுள்ளதுடன். 2024 ஆம் ஆண்டின் போது குறித்த சரியான கணக்கிற்கு பதிவு செய்வதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது வரிக்கு முன்னரான இலாபத்தினை கணிப்பிடுவதற்கு கருத்தில் கொள்ளப்பட்டிராத ரூபா 11,887,263 தொகையான கடந்த வருடத்தின் சீராக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணக்குக் கூற்றுக்களை தயாரிக்கும் போது வரிக்கு முன்னரான இலாபமாக கணக்கீட்டு காலப்பகுதிக்கு உரிய வருமானம் மற்றும் செலவினங்களை சீராக்கி சமர்ப்பிக்கப்படுவதுடன், அந்த இலாப நட்டக் கூற்றில் கடந்த வருடங்களின் சீராக்கங்கள் காண்பிக்கப்படாமையால் அந்த சீராக்கம் காசுப்பாய்ச்சல் கூற்றினுள் கட்டாயமாக சீராக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு அல்லாதுவிடின் காசுப்பாய்ச்சல் கூற்று சமப்படுத்தப்படாது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆண்டுக்குரிய வரிக்கு முன்னரான இலாபத்தினை கணிப்பீடு செய்யும் போது கருத்தில் கொள்ளப்பட்டிருந்த 2023 ஆம் ஆண்டுக்கு உரிய பணிக்கொடை செலவினமான ரூபா 467,090 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்தல் தவறவிடப்பட்டுள்ளது. அதனை எதிர்வரும் வருடங்களில் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது உள்ளடக்கப்படும் என்பது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிலையான வைப்புக்களை முதிர்வடைந்த பின்னர் கிடைத்த நிலையான வைப்பு வட்டியை மீள முதலீடாக காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 55,421,025 தொகையான பணம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதியினுள் கடந்த வருடத்தில் தவறுகள் சீராக்கப்பட்ட ரூபா 10,355,671 தொகையும் தவறுதலான கணிப்பீட்டின் மூலம் உருவாகிய ரூபா 66,455 தொகையும், உரிய ஆண்டில் இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 10,000,000 தொகையான நிலையான வைப்புத் தொகையையும் உள்ளடக்கியிருந்தது. | ஆண்டுக்குரிய காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது இவ்வாறு இடம்பெறாதிருப்பதற்கு கவனம் செலுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் நிறுவனத்தின் 2 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 372,043 தொகையான இடர் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், காசுப்பாச்சல் கூற்றில் ஊழியர் கடன் கொடுப்பனவாக ரூபா | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது ஊழியர் கடன் கொடுப்பனவாக எடுக்கப்படுவது, 2022 ஆம் ஆண்டின் மீதியான ரூபா 1,463,173 தொகை மற்றும் | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 672,480 காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதி மீதியான ரூபா 2,135,654 தொகை ஆகியவற்றுக்கு இடையேயான தேறிய வேறுபாடு ஆகும். அதாவது ரூபா 672,450 ஆன தொகை காசுப்பாய்ச்சல் கூற்றுக்கு எடுக்கப்பட்ட முறை சரியானது என்பதாகும். | |
| (ஊ) | நிறுவனத்தின் 4 உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த மேலதிக சம்பள கொடுப்பனவுத் தொகையில் ஆண்டினுள் ரூபா 156,995 அறவிடப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகையை காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கியிராதத்துடன், இவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்ட சம்பளத்தின் எஞ்சிய தொகையான ரூபா 835,716 காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்படு மூலதன ஒதுக்கங்களின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நடைமுறை பொறுப்புக்களில் ஆண்டிற்கான செயற்படு மூலதன ஒதுக்கமாக ரூபா 4,337,440 தொகை காசுப்பாச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டு உள்ள போதிலும் அவற்றுள் பணிக்கொடைகளின் வேறுபாடும் உள்ளடங்கி இருந்தது. | எதிர்வரும் வருடங்களில் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது அவ்வாறான வேறுபாடுகள் ஏற்பட்டால் செயற்படு மூலதன ஒதுக்கத்தின் கீழ் காண்பிப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது என்பது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச் சட்டம். | | | |
| (i) (1)20 உப பிரிவு | நிறுவனத்தின் செயல்பாடுகளில் ஏதேனும் அல்லது அனைத்தையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காகவும், சட்டத்தின் கொள்கைகளை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காகவும் சட்டத்தின் விதிகளின் கீழ் அமைச்சர் கட்டளை பிறப்பிக்கப்பட இயலுமான போதிலும் கட்டளைகள். பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 11 ஆம் பிரிவு | நிறுவனத்தின் திறமையான நிர்வாகத்திற்கு அவசியமாக நிறுவனத்தின் பணிப்பாளர்களாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்கள் சபையால் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவர்கள் அவ்வாறு பரிந்துரைக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 83 ஏ அத்தியாயம் 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு வருமானம் (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டம் மற்றும் PED 01/ 2023 ஆம் இலக்க சுற்றறிக்கை | முற்பணங்கள் தனிப்பட்ட வருமான வரிக்கணிப்பீட்டின் போது பதவிக்கு உரித்தான சம்பளம் மற்றும் படிகள் நீங்கலாக அந்தப் பதவிகளில் கடமைகளை நிறைவேற்றும் போது பெற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து படிகளும் உள்ளடங்களாக முற்பணங்கள் தனிப்பட்ட வருமான வரிக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், மதியரை கட்டணங்கள் வளப்பங்களிப்பு கட்டணங்கள் மற்றும் வருடாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் போன்றவற்றை கருத்தில் கொள்ளாது முற்பண தனிப்பட்ட வருமான வரி கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அது தொடர்பில் இந்த விடயங்களை கோவை படுத்தி அதன் செயலகத்திடம் வினவி அறிவுரை கோரப்பட்டுள்ளதுடன், கிடைக்கும் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு கணக்குகள் பிரிவிலிருந்து அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | உள்நாட்டு வருமான அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | திறைசேரி பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 மற்றும் PED 2021/01 ஆம் | மேடை நாடகங்களின் அனுசரணை பணிகளுக்காக ரூபா 100,000 தொகை 2023 ஏப்ரல் 10 ஆம் திகதி | அது தனியாக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெகுமதி அல்ல என்பதுடன், | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| இலக்க செயல்வழி கையேட்டின் (Operational Manual) 5.4 மற்றும் 2022 ஆகஸ்ட் 08 திகதிய 04/22 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | செலவழிக்கப்பட்டிருந்தது. | பாடநெறிகளை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முதலீடு என்பது. | எடுக்கப்பட வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 25 ஆன போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான பதவியணி 15 ஆகும். பதவியணியின் சிரேஷ்ட மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட 7 பதவிகளின் 5 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், நிறுவனத்தின் பணிகள் மற்றும் பணிப் பொறுப்புகளை செயல்படுத்தும் போது கட்டளை சட்டங்களின் மூலம் ஒப்படைக்கப்பட்ட பணிகள் பணிப்பாளர் சபைக்கு ஒப்படைக்கப்பட்டு முகாமைத்துவ பணிகளை நிறைவேற்றும் போது அதனை ஏற்படுத்தும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியான பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இதுவரையிலும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்றமையால் 2024.02.28 ஆம் திகதி பொது முயற்சிகள் திணைக்கள கூட்டத்தில் இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளமை. | நிறுவனத்தின் எதிர்கால நிலவுகையை முன்னிட்டு முறையான மனித வள முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |